**செ.வெ.எண்.606** **நாள்.27.11.2017**

**<u>காஞ்சிபுரம் மாவட்டம்</u>**

**<u>தாம்பரம் கார்லே மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற விழாவில் 6 பள்ளிகளைச் சேர்ந்த 1894 மாணவ/மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகளை மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர் திரு.பா.பென்ஜமின் அவர்கள் வழங்கினார். மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் உடனிருந்தார்.</u>**

***************

தாம்பரம் கார்லே மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர் திரு.பா.பென்ஜமின் அவர்கள் 6 பள்ளிகளைச் சேர்ந்த 1894 மாணவ/மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கினார்.

இவ்விழாவில் பேசிய மாண்புமிகு அமைச்சர்,

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் சீரிய திட்டங்களில் ஒன்றான விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம் இந்த தாம்பரம் தொகுதிக்குட்பட்ட 6 பள்ளி மாணவ/மாணவியர்களுக்கு 1894 மடிக்கணினிகள் இங்கு வழங்கப்படுகிறது. உலகிலேயே எந்த அரசியல் கட்சியும் செயல்படுத்திடாத இத்திட்டத்தை அம்மாவின் அரசு செயல்படுத்துகிறது. தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கையில் 5ல் ஒரு பங்கு பள்ளி கல்வித்துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. தனியார் பள்ளிகளுக்கு இணையாக அனைத்து வசதிகளும் தற்போது அரசுப்பள்ளிகளுக்கும் செய்து வரப்படுவதால் மாணவர்களின் தேர்ச்சி சதவீதம் அரசுப்பள்ளியில் அதிகரித்துள்ளது. பெற்றோர்கள் மாணவர்களை பள்ளியில் சேர்த்தால் போதும் மாணவர்களின் கல்வி பயில தக்க அனைத்து வசதிகளையும் அரசு செய்து தருகிறது. மாணவர்கன் செல்போன் பேசுவதை தவிர்க்க வேண்டும். தினந்தோறும் நாளிதழ்களை படித்து பொது அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். மாதா, பிதா, குரு, தெய்வம் என்று கூறுவதற்கேற்ப மாணவர்கள் ஆசிரியர்களுக்கு மதிப்பளிக்க வேண்டும். நாங்கள் இந்த அளவிற்கு உயர்ந்து அமைச்சர் பதவியடைந்தற்கு ஆசிரியர்களை மதித்து நடந்ததும் காரணமாகும்.மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மாணவர்களின் கல்வியறிவை உலகத்தரத்திற்கு வளர்க்கும் வகையில் இத்திட்டத்தை தந்துள்ளார்கள். இதனை உணர்ந்து மாணவர்கள் நல்ல முறையில் இத்திட்டத்தின் பயனை அடைய வேண்டும். மாணவர்கள் உயர்ந்த குறிக்கோளுடன் உயர்ந்த லட்சியத்துடன் செயல்பட்டு அரசு திட்ட பலன்களை பெற்று உயர்ந்த நிலை அடைய வேண்டும் என தெரிவித்தார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசுகையில்,

மாண்புமிகு மறைந்த முன்னாள் முதலமைச்சர் அவர்களின் சிந்தனையில் உதித்த மடிக்கணினி வழங்கும் திட்டம் மாணவர்களின் அறிவுத்திறனை செறிவூட்டும் திட்டமாகும். நமது மாவட்டத்தில் 147 பள்ளிகளில் 27,896 மடிக்கணினிகள் வழங்கப்படவுள்ளன. மடிக்கணினி மூலம் புத்தகத்திலுள்ளதைவிட உலகத்திலுள்ள அனைத்து விஷயங்களையும் அறிந்து கொள்ள முடியும்.

உள்ளங்கையில் உலகம் போன்ற அமைப்பு இத்திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டுள்ளது. கடந்த 10 வருடங்களுக்கு முன் மாணவர்கள் பாடபுத்தகத்தம் மற்றும் நூல் நிலையங்களிலிருந்து குறிப்பு எடுத்து படிக்க வேண்டும். தற்போது மடிக்கணினி மூலம் நேரத்தை மிச்சப்படுத்தி வீட்டிலிருந்தப்படியே சுலபமாக படிக்க முடியும். இத்திட்டத்தின் உன்னத நோக்கத்தை புரிந்து கொண்டு இதனை மாணவர்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்விழாவில் ஸ்ரீபெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கே.என்.இராமச்சந்திரன், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.ஆர்.இராஜா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிட்லப்பாக்கம் திரு.இராஜேந்திரன், முதன்மை கல்வி அலுவலர் திருமதி.ர.திருவளர்செல்வி, மாவட்ட கல்வி அலுவலர் திருமதி.தமிழரசி மற்றும் பள்ளி ஆசிரியர்கள், மாணவ, மாணவியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.